DEPOSITION OF WITNESS

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, SALEM.

**அமர்வு வழக்கு எண். 268/2022**

**அ.சா.– 8**

| | |
|---|---|
| பெயர் : திரு. சுரேஷ் | கிராமம்: |
| த/பெ. : திரு. நரசிம்மன் | தாலூக்கா : |
| வயது : | ஜாதி : |
| தொழில்: | மதம் : |

திரு. S. ஜெகநாதன், B.A, B.L., D.C.A.C.J., முதலாவது மாவட்ட கூடுதல் நீதிபதி அவர்கள், Solemnly affirmed in accordance with the provisions of Oath Act 44/1969, this the 14th day of March, 2024.

( எதிரிகள் 1, 2 ஆஜர். )

(சாட்சி தனக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட பிணையில் விடக்கூடிய பிடியாணையை ரத்து செய்ய மனு தாக்கல் செய்து மேற்படி மனு CMP.No. 728/2024 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு அனுமதித்து பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்பேரில் விசாரிக்கப்படுகிறார். )

**முதல்விசாரணை**:–

நான் அயோத்தியாப்பட்டணத்தில் குடியிருக்கிறேன். அம்மாபேட்டை செங்குந்தர் கல்யாண மண்டபம் எதிரில் Web link என்ற பெயரில் இணையதள சேவை நடத்தி வருகிறேன். நான் M.Sc., IT, பயின்றுள்ளேன். கடந்த 04.08.2021ம் தேதி நான் என் அலுவலகத்தில் இருந்தபொழுது மாலை 4.30 மணி முதல் 5 மணிக்குள் திரு.யுவராஜ் தலைமை காவலர் எனது அலுவலகத்திற்கு வந்து, என்னிடம் 2 செல்போன்களிலிருந்து பதிவுகளை பதிவிறக்கம் செய்து கலர் பிரிண்ட் போட்டு, குறுந்தகடில் பதிவு செய்து கொடுக்க கேட்டார். மேற்படி செல்போன்களை பெற்று அவற்றில் உள்ள பதிவுகளை கலர் ஸ்கிரீன் பிரிண்ட் செய்து, எனது Letter Pad–ல் சான்றிதழ்கள் வழங்கினேன்.

ஸ்கிரீன் சார்ட் மற்றும் கலர் பிரிண்ட் அடங்கிய தொகுப்பு – **அ.சா.ஆ.– 6.**

( எதிரிகள் தரப்பு வழக்குரைஞர் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது ) அ.சா.ஆ.–6ல் கண்ட பதிவுகள் என்னால் பதிவிறக்கம் செய்யப்பட்டு, போலீசாரிடம் வழங்கப்பட்டது என்பதற்கு ஆதரவாக நான் இந்திய சாட்சிய சட்டப் பிரிவு 65 (B) –ன் கீழ் வழங்கிய சான்றிதழ்கள்– **அ.சா.ஆ.– 7 மற்றும் 8.** ( எதிரிகள் தரப்பு வழக்குரைஞர் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது ). ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>குறுக்குவிசாரணை (எதிரிகள் தரப்பில்)</u>:–**

நான் இணையதள சேவை செய்வதற்கு சேலம் மாநகர காவல் ஆணையரிடமிருந்து அனுமதி பெற்றுள்ளேனா என்றால் எனது நிறுவனத்தின் பெயர் மட்டுமே இணையதள சேவை மையம். எனது மையத்தில் ஜெராக்ஸ் மற்றும் கலர் பிரிண்ட் மட்டுமே எடுத்து வருகிறேன். நான் செல்போனை கையாள்வதற்கு நிபுணத்துவம் பெற்றதற்கு ஆதாரம் எதுவும் காவல்துறையிடம் கொடுக்கவில்லை. எனது கல்வி தகுதியை குறிப்பிடும் சான்றிதழ்கள் எதுவும் ஆய்வாளரிடம் ஒப்படைக்கவில்லை. நான் பதிவிறக்கம் செய்த செல்போன்கள் யாருக்கு சொந்தமானவை என்று எனக்கு தெரியாது. ஆய்வாளர் எனக்கு எழுத்துமூலமாக வேண்டுகோள் கடிதம் எதுவும் கொடுக்கவில்லை.

தலைமை காவலர் யுவராஜ் எனக்கு நண்பர் என்பதால் அவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க மேற்படி சான்றிதழ்கள் வழங்கினேன் என்றால் சரிதான். எனது Letter Pad– ல் GST Number குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் பார்வையிட்ட செல்போன்களின் மாடல் விவரங்களை சான்றிதழில் குறிப்பிடவில்லை. அ.சா.ஆ.–6, 7, 8 வழங்குவதற்கு எனக்கு தகுதி இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறுமுதல்விசாரணை</u>** – இல்லை.

Sd./-S. Jeganathan,
I Additional District Judge,
Salem.